முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 24.02.2026. அ.வ.எண். 9/2012, பி.வா.சா.1.விஜயகுமார், த/பெ. வேலுச்சாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 2 ம் வாதி ரமேஷ் எனது சகோதரர் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்த போது 2 ம் வாதி, 1ம் வாதியிடம் இருந்து தாவா சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்து வீடு என்றால் சரிதான். பி அட்டவணை சொத்து ஏ அட்டவணை சொத்தின் வடபுறத்தில் உள்ள தடம் என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்தின் கிழபுறத்தில் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தென்வடல் ரோட்டிலிருந்து தான் தாவா பி அட்டவணை தடமானது மேற்குமுகமாக செல்கிறது என்றால் சரிதான்.

2) தாவா பி அட்டவணை தடமானது எனக்கு பாத்தியப்பட்ட மேற்கு புறத்தில் உள்ள சொத்தை அடைகிறது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் வேலுச்சாமி என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்தின் மேற்புறத்தில் தான் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது சொத்து, 1 ம் வாதியின் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் எங்கள் குடும்பத்தின் பூர்வீக சொத்துக்கள் ஆகும். எனது சிறிய தாத்தாவின் பெயர் என்ன என்றால் முத்துசாமிகவுண்டர் ஆகும்.

3) தாவா ஏ அட்டவணை சொத்துக்கள் முத்துசாமிகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எனக்கும் எனது தகப்பனார் மற்றும் எனது சகோதரருக்கு இடையே ஏற்பட்ட பாக சாசனத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாக சாசன பத்திரம் வா சா ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா சா ஆ 3 ன்

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

படி எனது சகோதரரான 2 ம் வாதிக்கு இந்த தாவா சொத்துகளுக்குள் எவ்வித பங்கும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

4) 1 ம் வாதி தாவா சொத்துக்களை எப்போது கிரயம் பெற்றார் என்றால் 1995 ம் ஆண்டில் கிரயம் பெற்றார். 1 ம் வாதி முத்துசாமியிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. முத்துசாமியின் மகன் மோகன்ராஜ் என்பவரிடம் இருந்து 2 கிரயம் பெற்றார்.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி